Registered as a News Paper in Ceylon
P M G No. B A 59/300 of 1939,

உ

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ௨ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். - கூங.] யாழ்ப்பாணம்:- கர ஞூ சித்திரை மீ ௧௪உ வெள்ளிக்கிழமை (27 ஏப்ரல் 1951) [இல. - ௬]

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

### வாலாஜாபாத் இந்துமத பாடசாலை வருடாந்த விழாவும் கால்கோள் விழாவும்

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் திரு. கே. காமராஜநாடார் தலைமையில் 22 – 4 – 51-ல் பாடசாலையின் 35-ம் ஆண்டு நிறைவுவிழாப் பல பெரியார்களின் சமூகத்தில் நடைபெற்றது. மேலும் குறித்த பாடசாலையின் 2-ம் கட்டடத்திற்குக் கால்கோள் விழாவும் இனிது நடைபெற்றது. மேற்படி கட்டடத்திற்கு திரு. செ. இராமசாமி முதலியாரும், மகனும், திரு. சடையாண்டி ஜெயராம செட்டியாரும் 4000 ரூபா நன்கொடையளித்தனர்.

### சுதுமலை சனசமூக நிலைய வருடாந்த விழா

18-4-51-ல் மேற்படி விழா சுதுமலை சிம்மய பாரதி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. எம். இராமலிங்கம் ஒ. ஏ. தலைமையில் ஆரம்பமாயது. "சனசமூக நிலையம் இருப்பதால் ஒரு கிராமம் எப்படி முன்னேற்றமடையும்" என்னும் விஷயம் பற்றி சொற்பொழிவு நிகழ்ந்தது. பின்பு புது வருடத்திற்குரிய உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பெற்றனர். ஈற்றில் பிரேமாவின் காதல் என்னும்விஷயத்தை மானிப்பாய் ஆங்கில வித்தியாசாலை மாணவர்கள் நடித்துக் காட்டினர்.

— நிருப

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## திருத்தென்குடித் திட்டைத் தலச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்.

முன்னைநான் மறையவை
முறைமுறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ
நின்றவன் தன்னிடம்
மன்னுமா காவிரி
வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல்
தென்குடித் திட்டையே.

திருச்சிற்றம்பலம்

—சம்பந்தன்

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் திருவருளால், சரும் பல்ல செல் என்னக் கழுகு அல்ல கரும் பென்ன, வளம் செழித்துச் சோறுடைத்து என்னும் வீறு பெற்றுடைய சோழ நாட்டிற் கங்கையிற் புனிதமாய காவிரியின் தென்கரையில் 15-வது தலமாயுள்ளது தென்குடித்திட்டை. இது கிழக்கே-திருக்கருகாவூர், தென்கிழக்கே திருஇரும்புதல், தெற்கே - திருப்பரிதி நியமம், தென் மேற்கே - தஞ்சை இராசராசேச்சுவரம், மேற்கே - கருந்திட்டைக்குடி, வடமேற்கே-திருவேதிகுடி, வடக்கே-திருப்புள்ள மங்கை, வடகிழக்கே - திருச்சக்கரப்பள்ளியாகிய திருத்தலங்கள் சூழப்பெற்றது. கருந்திட்டைக்குடி ஆதிய வைப்புத்தலங்களுள் ஒன்றுளது. திருஞானசம்பந்தப் பெருமான் திருப்பதிகம் பெற்றுச் சிறப்புறுவது. தெக்ஷிண குடித்வீபகம்; ஸ்வயம்பூதேச்வரம், வசிஷ்டாச்ரமம், தேனுபுரி குமரவேள் தாதையூர் முதலிய புனைபெயர்களை உடையது. சிதம்பரம் முதலிய சுயம்பு ஸ்தலங்களுள் ஒன்றாகப் புகழ்பெறுவது. காவிரியின் கிளைகளான வெண்ணாறு வெட்டாறு என்னும் இரு நதிகளுக்கு இடையில் எழில் பெற்று விளங்குவது.

மேலும் இப்புண்ணிய தலம் முன்னை நான்மறை, முருகவேள், யமன் முதலியோரால் பூசிக்கப் பெற்றது. இரவி மேடராசிக்கு வர மூன்று நாட்களுக்கு முன் விடியற் காலத்தில் வழிபடப்பெறுவது. தேவாரத் திருப்பதிகத்தில் மூர்த்தியின் முழுமுதற்றன்மையும், தலத்தின் தனிப்பெருந் தகைமையும், பொன்னிமா நதியின் புனித நீர் மகிமையும், செண்பகம் ஆதிய காவின் வளமும், உண்மை அறிவு ஆனந்தம் என்னும் முப்பொருள் விளக்கமும் போற்றப்பெற்றுள்ளன. வடமொழி தென் மொழிகளில் புராணங்களும் உள்ளன.

சுவாமி பெயர்:- பசுபதிநாதர், தேனுநாதர் வசிஷ்டேசுவரர், ஸ்வயம்பூதேஸ்வரர், தேனுபுரீசுவரர்.

அம்மை பெயர்:- உலகநாயகி, மங்களநாயகி, சுகந்த குந்தளாம்பிகை.

இருப்பிடம்:- தஞ்சை ஜில்லாவில் திட்டைப் புகைவண்டி நிலயத்திற்கு மேற்கே முக்கால் மைல் அரத்திலுள்ளது.

'தென்குடித் திட்டையினில்
சேருகை நாயகிக்குப்
பங்குகொடுத்த பசுபதியே'

—உமாபதிசிவம்.

### தோத்திரம்

உ

நடம்புரி மதுரை நம்பா சிலர்க்கு நல்கிய ஞானநற் பயனுங்
குடமபுரை செருத்தல் ஆனினம் பரந்து கொண்டிடு மண்டுநீர் புனல்போல்
மடம்படு சிலர்க்குத் தீவினைப் பயனும் வாளாப்பருகு பானியம் போல்
கடம்பமாவனத்தாய் இனையவாவினையேன் கடவுளை கோவதென் கருதே

(வெள்ளியம்பலத்தின்கண்ணே) ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் திருவாலவாய்ப் பெருமானே, தேவரீர் சில உயிர்கட்கு உதவிய ஞானமாகிய நல்ல பயனானது, குடம்போன்ற மடியினையுடைய பசுக்கூட்டங்கள் மேயச் சுரந்து விடத்திக் குடிக்கும் நிறைந்த தண்ணீர்போலமைய, அறியாமையோடுகூடிய சில ஆன்மாக்களுக்கு, கொலைத்தொழிலையுடைய பாம்புண்ட நீர் நஞ்சாதல்போல (அந்த ஞானம்) தீவினையாகமாறும், கடம்பவனமெனப்படும் மதுரையிற் கோயில் கொண்டருளிய பெருமானே, இங்ஙனமாகப் பாவியேன் (எனக்கு நேர்ந்த இந்நிலையிட்டுத்) தெய்வத்தை நோவதால் என்ன பயன் என்பது பொருள்.

தேவரீர் ஆன்மாக்களுக்கு அருளும் ஞானம் ஒன்றேயாக, அதனை ஏற்கும் ஆன்மாக்களின் பக்குவநிலையிலே அந்த ஞானத்தின் நற்பயன் தீப்பயன் தங்கியிருப்ப, அறியாமையின்பாற்பட்ட தமியேன "செய்தீவினையிருக்கத்" தெய்வத்தை நோதலால் என்னபயன் என்றபடி; செருத்தல் - மடி; பானியம் - நீர்; இங்கே சிவனருளும் ஞானம் சுத்த நீருக்கு ஒப்பாக, பக்குவர் - பசுவுக்கும், அபக்குவர் பாம்பிற்கும் ஒப்பாகக் கூறப்பட்டனர்; இதனை:—

பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெள்ளணீர் அமிர்தமாம் — ஓம்பற்
கொளியாம் உயர்ந்தோர்க்கு ஞானம்
களியாக கடையார்பால் மாட்டு"

எனவரும் ஆன்றோர் வாக்காலுமுணர்க. (68)

### அரிசி நெல்லிற்கு விலைக் கட்டுப்பாடில்லை

வியாபாரிகள் விற்கும் அரிசி நெல் லென்னும் பண்டங்களுக்கு எவ் வகையான விலைக்கட்டுப்பாடும் இல்லையென மேற்படி அரசாங்க உணவுக்கட்டுப்பாட்டதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### ஸ்ரீ ராமநாதன் நூற்றாண்டு விழா

இந்தவிழா, வருகிற சனிக்கிழமை (28-4-51) பரமேசுவரக் கல்லூரியிற் சிறந்த முறையிலே நடைபெறுமெனவும், ஆசிரியருமாகிய சென்னைப் பிரதம நீதியரசர் பி. வி. இராஜமன்னார் தலைமையிற் பாடுவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மகா கும்பாபிஷேகம்

கொழும்பு, மருதானை, சப்பிததாவத்தை (தீவு) ஸ்ரீ பாலசெல்வவிநாயக மூர்த்தி கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழும் கர ஞூ சுரூ (26-4-51) வியாழக்கிழமை முற்பகல் 10½ மணியளவில் நடைபெறும் 1½ மணிக்குமேல் மாகேசுவர பூசையும், அன்னதானமும், இரவு செல்வவிநாயகர் ஸ்ரீபாலகாரர் விமானத்தாரோணக் காட்சியும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் விழா

### தமிழ்விழாப் பிரசாரப்பகுதிப் பொறுப்பாளர் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே 29, 30-4-51 1-5-51-ல் பரமேசுவரக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் தமிழ்விழா சம்பந்தமான முயற்சிகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இத்தமிழ்விழா முதலாண்டிலே பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையிலும், 2-ம் ஆண்டு சோழநாட்டைச் சேர்ந்த திருவாரூரிலும், 3-ம் ஆண்டு சோநாட்டைச் சேர்ந்த கோயமுத்தூரிலும் நடைபெற்றது. இப்பொழுது ஈழநாட்டில் நடைபெறவிருப்பதை எவருமறிவர். யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியிற் கவின்பெற அமைக்கப்பெற்றுள்ள பந்தலில் இவ்விழா 29-4-51 ஞாயிற்றுக்கிழமை காலை பத்தரைமணிக்கு ஆரம்பமாகும். அன்று காலை 8 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் பள்ளிக்கூடத்திலிருந்து தமிழ் ஏட்டுச் சுவடிகளுடன் ஊர்வலம் ஆரம்பமாகும்.

#### விழாத் தலைவர்கள்

தமிழ்விழா வரவேற்புச் சபையின் தலைவர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்பார். டக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் விழாவைத் திறந்து வைப்பார். கலை வளர்ச்சியில் ஈடுபட்டுழைக்கும் ஸேர். கந்தையா வைத்தியநாதன் கலைக் காட்சியைத் திறந்து வைப்பார்கள். சென்னை சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. வி. ஆர். ஸ்ரீநிவாசன தமிழ் விழாப் பொது தலைவராகப் பணியாற்றுவார்.

#### மூன்று பகுதிகள்

தமிழ் விழா: இலக்கியப் பகுதி, விஞ்ஞானப்பகுதி, சரித்திரப்பகுதி, என மூன்று பெரும் பகுதிகளாக நடைபெறும். இப் பகுதிகளுக்கு முறையே பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை (சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பகுதித் தலைவர்) டக்டர் கே. எஸ். கிருஷ்ணன், எவ். ஆர். எஸ், திரு. சு நடேசபிள்ளை அவர்கள் தலைமை வகிப்பார்கள். இம்மூன்று தினங்களிலும் தமிழ் அறிஞர்கள் பலர் பிரசங்கஞ் செய்வார்கள்.

ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டரை மணிக்குக் குறிக்கப்பட்ட செம்பை வைத்தியநாதையர் கச்சேரியும், செவ்வாய்க்கிழமை இரவு எட்டரை மணிக்கு திருமதி எம். எல். வசந்தகுமாரியின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும். 28-ந் திகதி சனிக்கிழமை விழாப் பந்தரிற் கொடியேற்றுவிழா நடைபெறும்.

— நிருப

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ் கர ஹு சித்திரை ௴ ௧௪ உ வெள்ளிக்கிழமை


## "கொழும்பு இந்துக் கல்லூரி"

கொழும்பு நகரத்திலே பௌத்தமக்கள் உயர்தரக்கல்வி பயிலும் பொருட்டு ஆநந்தாக் கல்லூரியிருக்கிறது; கிறீஸ்தவ மக்கள் பயிலுதற்குக் கிறீஸ்தவ கல்லூரிகளுண்டு; இஸ்லாமிய மக்களுக்குச் சகிறாக் கல்லூரியுண்டு; ஆனால் இலங்கைக் குடிசனத்தில் இரண்டாவதாக வைத்தெண்ணப்படும் இந்து மக்களுக்கென ஒரு கல்லூரி இலங்கையின் தலைநகரில் இற்றைவரையில் இல்லையாகும். இற்றைக்குப் பல வருடங்கட்கு முன் ஸேர். பொன். இராமநாதன் கொழும்புமாநகரிற் சைவமக்கள் பொருட்டு ஒரு ஆங்கில வித்தியாசாலையைத் தாபித்து நடத்தியதுண்டு; ஆனால் அது காலகதியில் நடவாதொழிந்தது.

வடமாகாணம் தென்மாகாணந் தவிர, ஏனைய ஏழு மாகாணங்களுள் மேன் மாகாணத்திலேயே சைவமக்கள் தமிழ் மக்கள் உத்தியோகார்த்தமாகவும் வியாபாரம் முதலிய கருமார்த்தமாகவும் அதிகமாகச் சஞ்சரிக்கிறார்களெனலாம்; அம்மாகாணத்திலும் கொழும்புமா நகரில் மிக அதிகமாகத் தமிழ்மக்கள், சைவமக்கள், விசேடமாக யாழ்ப்பாணத்துமக்கள், இலங்கை இந்திய மக்கள் வசிக்கின்றார்களெனலாம்; கொழும்பிற் பொன்னம்பலவாணேசுவரர் கோயில் முதலான பல சைவாலயங்களுண்டு; அங்கே விவேகாநந்தசபையெனப்படும் சைவ மகாசபை சிறப்பாகச் சைவசமயத்தின் பொருட்டும் தமிழ்மொழியின் பொருட்டும் தமிழ்மக்களின் ஈடேற்றத்தின் பொருட்டும், பொதுவாக இலங்கை மக்களின் ஈடேற்றத்தையுத்தேசித்தும் உழைத்து வருகின்றது; இன்னுஞ் சைவமக்கள் இந்து மக்களுக்காகிய சிற்சில தாபனங்களும் முயற்சிகளும் கொழும்பில் நடைபெற்று வருகின்றன; இவைகளெல்லாமிருப்பினும் கொழும்புமா நகரிலே ஒரு சிறந்த இந்துக்கல்லூரியில்லாமையாகிய பெருங்குறை அந்த நாள் தொட்டு இந்த நாள்வரையி லுண்டென்பதைச் சைவமக்கள் தமிழ்மக்கள் சிந்திக்காமலிருக்கமுடியாதாகும்; ஆனால் இந்தப்பெருங்குறை நீங்குங் காலமும் சமீபித்துவிட்டதென நாம் இப்பொழுது மகிழ்ச்சியுடன் கூறுதலாகும்.

கொழும்பிலுள்ள சிறந்த சைவ அபிமானிகள் தமிழபிமானிகள் நீடித்தகாலமாகவுள்ள இந்தப் பெருங் குறைவையொழித்து, அங்குள்ள ஏனைய சமயப்பிள்ளைகள் சாதிப்பிள்ளைகள் உயர்தரக் கல்வி பயின்று வருதல் போலவே, சைவப்பிள்ளைகள் தமிழ்ப்பிள்ளைகளும் பயின்று வரவேண்டுமென்ற நோக்கங் கொண்டாராய், கொழும்பு நகரில் ஏற்றஸ்தானத்தில் ஒரு இந்து ஆரம்பக் கலாசாலையையும் உயர்தரக் கல்லூரியையுந் தாபித்தற்கு நிச்சயித்து முயற்சி செய்யலாயினர்; இந்த அபிமானிகளின் தொகை இப்பொழுது இருபத்தைந்தாகும்; இக் குழுவினர் கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கமெனப் பெயரிட்டுக் கொண்டு கருமமாற்றத் தொடங்கினார்கள். தங்களுள் ஒருலட்சம் ரூபாவைச் சேர்த்தார்கள்; முதல் இந்து ஆரம்பக் கலாசாலையைத் தாபிக்க நோக்கங்கொண்டு இச் சங்கத்தினர் இதற்கு ஏற்ற இடந் தேடினார்கள்; ஆனாற் கொழும்பிலே கலாசாலைக்கு வாய்ப்பான இடத்தைத் தேடிக்கொள்ளுதல் இக்காலத்தில் இலகுவான காரியமல்ல; எனினும் தூய நோக்கத்துடன் தொடங்குங் கருமம் வீண்போகாது. அந்தப் பிள்ளையாருடைய திருவருளென்றே நாம் சொல்லுவோம், பம்பலப்பிட்டி சம்பாங்கோட்டுப் பிள்ளையார் கோவிலதிகாரிகள், குறித்த கோயிலுக்குரிய ஆதனத்தில் ஒரு ஏக்கர் கொண்ட நிலத்தை இந்தப் புண்ணிய கருமத்தின் பொருட்டு இச்சங்கத்தாருக்குக் குத்தகையாகக் கொடுப்பதற்கு உடம்பட்டனர்; இந் நிலத்திலே ஆரம்பக் கலாசாலை விரைவில் அமைக்கப்பெறலாகும்; சமயோசிதமாக இவ்வாரம்பக்கலாசாலை இப்பொழுது புதிய கதிரேசன் கோவிலுக்குரிய மடத்தில் வைத்து நடத்தப்பெறலாயிற்று.

இனி உயர்தரக் கல்லூரியை அமைத்தற்காகிய நிலமும், இப்பொழுது இச் சங்கத்தார் குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட நிலத்திற்கு அணித்தாக, புதிய கதிரேசன் கோயிலுக்குரியதாய், அக்கோயிலின் பின்புறத்திற் கிடக்கின்றது; இந்த நிலத்திலும், பெரிய கலாசாலைக் கட்டடம் அமைக்கும்பொருட்டு, குறித்த ஆலய அதிகாரிகளிடம் இரண்டு ஏக்கர் கொண்ட நிலத்தைக் குத்தகையாகப்பெறுதற்காகிய முயற்சிகள் துரிதமாக நடக்கின்றன; இக் கருமமும் விரைவில் இனிது கைகூடும்.

இனி, அடுத்த கருமம் இப்படியான இரு சைவக் கலாசாலைகளைத் தாபித்தற்காகிய கட்டடநிதி தேடுதலாகும்; "தூயவை துணிந்தபோது இடர்வந்து தொடர்வதுண்டோ" என்றபடி, இந்த நல்ல கருமத்திற்கு எவ்வகையான இடையூறும் நேரப்போவதில்லை; குறித்த வித்தியாவிருத்திச் சங்கத்தாரின் இடையறா முயற்சியினால், இதற்காகிய நிதி மேலும் மேலும் சென்று சேர்கின்றதெனை அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்; கொழும்பிலாக, இலங்கையின் ஏனைய பாகங்களிலாக, மலாய்நாட்டிலாக, தென்னிந்தியாவிலாக, உலகத்தின் வேறு எந்தப் பாகத்திலாக வசிக்குஞ் சைவாபிமானிகள், தமிழ்மக்கள், வித்தியாபிமானிகள் இத்தூய தொண்டிற்கு, புண்ணிய கருமத்திற்குத் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யாமலிருக்க முடியாதல்லவா! "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது வள்ளுவர் வாக்கு.

---

## நமது சோதிடப் பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (29-4-51—5-5-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

மனக்குழப்பந்தரும் வாரம். வரவிற்கு மேற்பட்ட செலவுண்டாகும்; அனுவசியமாகப் பழி கேட்க நேரும்; விபரீத விளக்கமுமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

பண விஷயமாக லாபமான கிழமை; புதிய முயற்சியில் நினைத்தபயன் கிடைக்கும்; பகைவர் அபசெயமடைவர்; வியாச்சியமிருந்தால் வெற்றியுண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

வாரத்தின் முதலிரு நாளும் அவதானமாக நடந்துகொள்க; எஞ்சிய நாட்களிற் சுகமுண்டாம்; ஆண்களுக்குப் பெண்களாலும் பெண்களுக்கு ஆண்களாலும் பரஸ்பரம் நன்மையுண்டு; சனசமூக வழைப்பிலுஞ் சித்தியுண்டாம்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

முதலிரண்டு தினங்களிலும் காரிய சித்தியுண்டு; திங்கள் செவ்வாய்க் கிழமைகளிற் சாவதானமாக நடந்துகொள்க; எஞ்சிய தினங்கள் புதிய கருமங்களுக்கு அநுகூலமானவை.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தின் முற்பகுதியில் சுகமும் பண லாபமுமுண்டு; புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக் கிழமை மத்தியானம் வரை அவதானமாக நடந்துகொள்க; கிழமை முடிவில் அதிக பொருட்செலவுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இந்தக் கிழமையின் இறுதி யிரண்டு நாளொழிய ஏனைய நாட்கள் நன்மை பயப்பன. சுற்றமித்திரரால் உதவியுண்டு; வெள்ளி சனிக் கிழமைகளிற் சுகத்தைப் பேணுக.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

மனச்சஞ்சலந்தரும் வாரம். நண்பரால் சுனஸ்தாபம் நேரக்கூடும்; புதுக்கருமங்களால் நினைத்த பலன் கைகூடா. எவரோடும் நியாயம் பேச வேண்டாம்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை

மிகவும் அநுகூலமான கிழமை; புதிய முயற்சியில் அனுகூலமும் பொருள்வரவுமுண்டு; கிழமை முடிவதற்கிடையில் ஒரு பொல்லாத எதிரிக்குக் கேடு நேரக்கூடும்

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இவ் வாரத்திலே அநுகூலமடையவேண்டின் விடாமுயற்சியோடு உழைத்தல் வேண்டும். செலவு அதிகப்படும். பெண்களில் ஆண்களும், ஆண்களில் பெண்களும் அதிக நம்பிக்கை வைக்கவொண்ணாது.

**மகரராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

சில பிரதான கருமங்களில், நண்பர்களுந் துரோகஞ் செய்யக்கூடும்; வாகனங்களால் இடையூறு நேர்தலுமாகும்; குடும்பத்தில் யாருக்கேனும் நோய்கண்டு, அதனாற் சஞ்சலமுற இடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3 ம் பாதம்

பணவருவாயுண்டு; சுற்றமித்திரர் உதவியுமுண்டு. மக்களாற் சுகமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

பண வருவாயுண்டு; ஆனால் மன ஆறுதலில்லை; எவரோடும் பிணங்குதல் வேண்டாம்; மேலுத்தியோகத்தருடன் சாவதானமாக நடந்துகொள்க.

---

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் இம்மாதம் ௪அ உ (1 - 5 - 51) செவ்வாய்க்கிழமையன்று அச்சபையின் சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழும். பகல் 10 - 1 மணிவரை கடவுள் ஆராதனை நால்வர் பூசை திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம் படித்தலும் தேவாரங்கள் ஓதலும் மாகேசுரபூசையும் நடைபெறும்.

---

## அருந்தப்பு

பாணந்துறை நீதிஸ்தலத்திலே, P. ஆர் னலின்டயஸ் என்னும் ஒரு சிங்களச் செவிட்டுக் கிழவனுக்கு விரோதமாக, அக் கிழவன் புகைரதப் பாதைத் தண்டவாளத்திற் படுத்துப் புகைரதச் சிறகளில் கெரியுண்டு தற்கொலைசெய்ய எத்தனித்தானென்ற குற்றச் சாட்டின் பேரில, பாணந்துறைப் பொலிசார் நீதிபதிமுன் கொண்டுவந்து நிறுத்தினார்கள்; நீதிபதி கேள்விகள் கேட்டபோது, தனக்குக் காது கேளாதெனவும் ஆனபடியால் தான் செய்த குற்றத்தை முதன் முறையாகப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டான்;

நீதிபதி:- அது சரி, செவிடனாகவுள்ள நீ புகைரதப்பாதைமூலம் நடந்துபோக வேண்டியதில்லையே; ஏன் அங்கே போனாய்?

கிழவன்:- அங்கே போனபடியாற்றான் ஐயா, நான் இப்பொழுது இந்தச் சாட்சிக் கூட்டில் நின்று துடிப்பது கின்றேன்; நீதிபதி சிரித்துவிட்டுக் கிழவனை எச்சரிக்கை செய்து விட்டாராம்.

## காதலியைச்சுட முயன்றவர்க்கு 7 வருடச் சிறைத்தண்டனை

லலிதா சண்முகவல்லி, கம்பிட்டியில் வசிக்கும் ஒரு பிராமணப் பெண்; வயசு 19. இப்பெண் கருநாடக சங்கீதம் பழக்குவதற்குப் புகையிரத மார்க்கமாக வேற்றுத் தானத்திற்குப் போய் வருவதுண்டாம்; இப்படிப் போய் வருங் காலத்திலே, இப் பெண்ணுக்கும், 23 வயசு வரையுள்ள சேனுடன்தெனவீக் என்னும் புகையிரதக் காவலனுக்கு மிடையிற் பரஸ்பரம் காதலுண்டாய்விட்டதாம். ஆனால் இந்த மர்மத்தையறிந்த பெண்ணின் பெற்றோர், தம் மகளின் காதலன் இஸ்லாமிய மதத்தினனென்ற காரணத்தினால், மகள் அவனை மணஞ் செய்தற்கு உடன்படாராய் மலைநாட்டுத் தனபக்தி இராதினசபாபதி யென்னு மொருவனுக்குக் கலியாணஞ் செய்து கொடுத்தார்கள்; தம்பதிகள் இருவரும் வாழ்ந்து வரும்போது, தன்னை அப்பெண் ஏமாற்றிவிட்டாள் என்று ஆத்திரங்கொண்ட தெனவீக் ஒருநாள் அப்பெண்ணிருக்குமிடத்திற்கு நேரே சென்று துப்பாக்கி கொண்டு அவளுக்கு இலக்காகச் சுட்டான்; ஆனால் இலக்குத் தவறிவிட்டதால் பெண் தப்பிவிட்டாள்; எதிரி கொலைசெய்ய எத்தனித்த குற்றச்சாட்டின்பேரில், கண்டி உயர்தர நீதிமன்றத்தில் விசாரணை செய்து 7 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்.

## பெண்கள் தேச ஊழிய சங்கம் யாழ்ப்பாணம்

சென்ற பங்குனித் திங்கள் 29-ந் தேதி (7-4-51) சனிக்கிழமை மாலை 4½ மணியளவில், காவலர் பாடசாலை மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஸ்ரீமதி. மா. மங்கனம்மா தலைமையில் நடைபெற்றது. "மகளிர் இல்லம்" ஒன்று நிறுவும் நோக்கங்கொண்ட நூற்றுக்கணக்கான பெண்கள் சமூகமாகித் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை விரித்துப் பேசியுள்ளனர். மேற்படி நோக்கத்தைப் பல ஊர்களிலுமுள்ள பெண்களிடத்தும் ஊறச் செய்வதற்காகப் பலவிடங்களிற் கூட்டங்கள் நடத்த வேண்டும் என நிச்சயித்த பின்பு சென்ற வருடத்தில் தலைவியாகவிருந்த ஸ்ரீமதி மங்கனம்மாவையே புது வருடத்திற்கும் தலைவியாகக் கொண்ட ஒரு நிருவாகசபை தெரிவு செய்யப்பெற்றது. ஈற்றில் மேற்படி இல்லம் நிறுவுவதற்கு வேண்டிய நிலத்தைத் தருமமாக உதவியுள்ள ஸ்ரீமதி. சி. சிவகாமியாருக்கும், தலைவி மங்கனம்மாவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

—கடிதம்.

## காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. சு. கதிரேசு

இந்த ஏப்பிரல் மாசம் முற்பகுதியில் (12-4-51) சென்னையிலுள்ள தமது வாசஸ்தானத்தில் தேகவியோகமாகிய வழக்கறிஞர் திரு. சு. கதிரேசு யாழ்ப்பாணத்திலே சிறந்த வழக்கறிஞராக விளங்கியதோடு, பொதுக் கருமங்கள் பலவற்றில்ஈடுபட்டுஉழைத்தவர்; ஆங்கிலமும் தமிழும் நன்குபயின்ற பாண்டித்தியமுள்ளவர்; ஆங்கிலத்தில் சைவசித்தாந்த நூல் சில எழுதியுள்ளவர்; இவர் முறைக்கு இருபத்தைந்து வருடங்கட்கு முந்தியே யாழ்ப்பாணத்தை விடுத்துக் கொழும்பிற் சில காலம் வசித்துப் பின்னர் சென்னையிலே வசிப்பாராயினர். இவர் திரு. க. இராசரத்தினமவர்களின் தமையனும், திரு. க. பாலசிங்கமவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற உவைமன், த. கதிரவேற்பிள்ளையின் மருகரும், கோப்பாய் பிறக்ரர், திரு. C. சுப்பிரமணியமவர்களின் மாமனுமாவர். இவரது ஆன்மா சாந்தியடைக.

## நமது கலைநிலையம்

### பிரதோஷ விரத மான்மியம்

இது சிவவிரதங்களுட் சிறந்ததும், பல்லாயிரக் கணக்கான நன்மக்களால் மாசந்தோறும் இருமுறை பத்தியோடு அநுட்டிக்கப்படுவதுமாகிய பிரதோஷ விரதத்தின் மகத்துவத்தை இலகுவான வசனநடையில் விரிவாகக் கூறுவது; இதன்கண் பிரதோஷ விரதத்தை அநுட்டிக்கவேண்டிய விதி, பிரதோஷ காலத்தில் ஆலய வழிபாடு செய்யும் முறை, விரத மகத்துவம், புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் இவ்விரதத்தை யநுட்டித்துப் பேறு பெற்றோர் வரலாறு முதலியன அடங்கியுள்ளன; இது போன்ற ஒருநூல் முன் வெளிவந்ததில்லையெனலாம்; இது இப்பத்திரிகை யாசிரியராற் பிரமோத்திர காண்டம் முதலிய சைவ நூல்களை ஆதாரமாகக்கொண்டு எழுதப் பெற்றது. பிரதியொன்றன்விலை 40 சதம். பிரதிகள் நூலாசிரிய ரிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன.

### திருவேதிகுடித்திருப்பதிகங்கள் தென்குடித்திட்டைத் திருப்பதிகம்

தருமபுரம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானத்தின் கட்டளைப்படி, மேற்படி ஆதீன 241-ம் 242-ம் எண்களாகத் தனித்தனி இப்பொழுது வெளியிடப்பட்ட இந்த இரண்டு வெளியீடுகளிலும், மேற்படி தலங்களின் சுருக்க வரலாறுகளும், அவ்வவற்றிற்குரிய தேவாரப் பதிகங்களும், அவற்றின் விளக்கவுரையும் அடங்கியுள்ளன; அன்பர்கள் பாராயணஞ் செய்யும் வண்ணம் இலவச வெளியீடாக வழங்கப்படுவன.

## கப்புது கிராம முன்னேற்றச் சங்கப் பிரசாரக் கூட்டம்

இக்கூட்டம் 10-4-51 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் வடமராட்சி கிராம முன்னேற்ற சமாஜத் தலைவர் திரு. சி. சரவணப் பெருமாள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. அத்தருணம் கிராம முன்னேற்றச் சங்க உத்தியோகத்தர் திரு. எம். பராசசிங்கமும் பொலிகண்டி கிராமத் தலைமைக் காரரும் தனித்தனி எடுத்துப் பேசியதில் இக்கிராமவாசிகள் அனைவோரும் மது. மாமிசம் அருந்துதல் முதலிய துர்ப்பழக்க வழக்கங்களையொழித்து உறைந்தசைவ சமயப் பற்றுடையவராய் இருத்தலையும் கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து (10000) பதினாயிரம் ரூபா பெறுமதியான ஒருமைல் நீள முள்ள தெருவை மண், கல் முதலியன கொண்டு, அரசாங்கத்தாரின் உதவியையும் சிறிதளவு பெற்று பூர்த்தி செய்யப்பட்டதையும், பாடசாலை ஒன்று புதிதாகக் கட்டி ஒரு பொதுவ தரான பூட்டுகள் நடைபெறுவதையும் பாராட்டிப் பேசினர். சமாஜத் தலைவர் திரு. சி. சரவணப் பெருமாள் இக்கிராமத்துக்கு அத்தியாவசியமான மூன்று காரியங்கள் வேண்டும் 1 தபால் கந்தோர் போக்கு வரத்துக்காக ஓர் உப தபாற்கந்தோர் 2 வைத்தியம் மருந்து கொடுக்கும் ஒழுங்குள்ள ஓர் வைத்தியசாலை 3 ஓர் கிராம விதானை; இவற்றிற்கான உதவிகளைத் தாமும் இயன்றளவு செய்வதாகக் கூறினர். பின்னர் இரவு 9 மணியளவில் சபையோர் நன்றியுரையின் பின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

— கடிதம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு இராசா சோமசுந்தரம்.

வழக்காளி

இல 6867

எதிராக

யாழ்ப்பாணம் பெரியகடை.

1. சேதுராசாசெட்டி சண்முகநாதன்.
2. என். எஸ். சேதுராசா செட்டி மைதம் பெண் காமம்மா (காலஞ்சென்ற என். எஸ். சேதுராசா செட்டியின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்.)

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6867-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள், 1951-ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 17-ந் திகதி (17-5-51) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 18172-30-ம், இதில் ரூபாய் 15000/=க்கு 31-7-50 திகதி தொடக்கம் 20-9-50 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 420-16 சதம் இதில் ரூபா 250/= இறுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை கிழக்கிலுற 'உப்புக்குளக் கரையும், புங்கு நின்ற உப்புக்குளக்கரை அலைதி தாண்டிக்குளக்கரையும்'' செற்பரப்பு 24-ம் குளி 5-ம் முற்பதிவு D 153/82. ஆனால் செற்பரப்பு 25-ந்தாக முற்பதிவு D 186/58. இது 1944-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ந் திகதி உலாந்தா என். வீ. பின்னையால் 86 C. இலக்கப்படத்தில் லொற 1 A 3க்கு நிற்க செற்பரப்பு இரண்டு (2-ம்) குளி 6-ம் மற்றும் அதற்கு உட்பட்டவைகளும். எல்லை கிழக்கும் தெற்கும் 1 A 2 இன்றி. என். எஸ். சேதுராசா செட்டிக்கும் என். சுப்பிரமணியத்திற்குமுரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு லொற் 1 A 4 என் சுப்பிரமணியத்தின் ஆதனம், இதடங்கலும். முற்பதிவு D 183/220.

2. மேற்படி வண்ணார்பண்ணை கிழக்கிலுற "உப்புக்குளக்கரையும், புங்கநின்ற உப்புக்குளக்கரை அலைதி தாண்டிக்குளக்கரையும்'' செற்பரப்பு 24-ம் குளி 5-ம் முற்பதிவு D 153/282 ஆனால் செற்பரப்பு 25ந்தாக முற்பதிவு D 186/58. இது மேற்படி உலாந்தாவின் படத்தில் லொற் 1-ம் 2-ம் ஆகக் குளி ஆறு (6-ம்) எல்லை கிழக்கு எம். வே. இச்சின சங்கின் ஆதனம். வடக்கு ஒழுங்கை தெற்கு, மேற்கு லொற 1 A 3 என். எஸ். சேதுராசா செட்டியின் ஆதனமும் லொற 1 A 4 என். சுப்பிரமணியத்தின் ஆதனமும். லொற் 1 A 5 எம். எம். முத்து முகமெட்டின் ஆதனமும். தெற்கு எஸ். வேலுப்பிள்ளையின் உருமைக்காருக்குரிய ஆதனம். இதில் சொரியல் ½ அரைவாசி (½) முற்பதிவு D 18'/169.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
4—4—51.

M 12 27—4—51.

## தேகவியோகம் சீநிவாசகம்

மலாயா கோலக்கங்சார் என்னுமிடத்தில் "நவசியர்" வேலை மேற்பார்வை யத்தியோகத்தராக் கடமையாற்றி இளைப்பாறி உபகார வேதனம் பெற்று வந்தவருமாகிய அராலி தெற்கு திரு. விசுவநாதர் சிநிவாசகம் தமது 75-ம் வயதில், சென்ற 10-4-51 தேதியில் தேகவியோகமாயினர்; இவரது சமக்கடன்கள் அராலிச் சைவவாலில் வித்தியாசாலை உடற்பயிற்சி ஆசிரியரும் இவரது புதல்வருமாகிய திரு செல்லத்துரையால் விதிப்படி செய்யப்பெற்றன; இவரது ஆன்மா சாந்தியடைக.

காலஞ் சென்ற திரு. சிநிவாசகத்தின் உபாக் கிரிகையைப்போது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய 2½ ரூபா வரப்பெற்றோம்.

மனேஜர்
இ. சா.

## திருச்சி ரேடியோ

※ இசைத்தட்டு

**வெள்ளி ஏப்ரல் 27**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கடலூர் எம் ஜயலக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 டாக்டர் * 8 30 முடிவு

1 ஆரம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வீணை * 2 தமிழில் செய்தி 2 10 எஸ் வாசுதேவன் பாட்டு 2.45 முடிவு.

5 30 சின்னமனூர் வி கணேசன் நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சமூக சித்திரம் தொடர்கதை 7 45 சமகதபால்பெட்டி 8 கடலூர் எம் ஜயலக்ஷ்மி பாட்டு 8 30 குரலவை * 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 சின்னமனூர் வி கணேசன் நாகஸ்வரம் 10 முடிவு.

**சனி ஏப்ரல் 28**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 ஆர் வசந்தா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை * 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரலவை* 2 தமிழில் செய்தி 2 10 சித்ரகானம் * 2 45 முடிவு.

மாலை 5 30 டி என் ஆர் தர்மராஜனுடைய கிளாரினெட் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 டி என் சுவாமிநாத பிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச்சொல் கேளீர் 9 30 வட இந்திய சங்கீதம் ஒலிப்பதிவு 10 முடிவு.

**ஞாயிறு ஏப்ரல் 29**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்திலசெய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு

12 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் அம்மாள் பாட்டு 12 45 கே ஆர் கணபதி புல்லாங்குழல் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 துறையூர் எம் ராஜகோபால சர்மா * 2 தமிழில் செய்தி 2 10 சித்ரகானம்* 2 30 செண்டு நிகழ்ச்சி 3 முடிவு

மாலை 5 30 எம் ஜி கௌரிகுமாரி வீணை 5 45 டீ ஆர் சந்தானம் பாட்டு 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை * 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 புதியவெளியீடுகள் * 7 45 திரைப்பட விமர்சனம் 8 கணவனின் உள்ளம் நாடகம் 8 30 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷி சுந்தரம் அம்மாள் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 எம் ஜி கௌரிகுமாரி வீணை 10 முடிவு.

**திங்கள் ஏப்ரல் 30**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருப்பாம்புரம் என் சிவசுப்பிரமணியபிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை * 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 என் ஜி சிட்டப்பா * 2 தமிழில் செய்தி 2 10 பி வி லலிதா பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 டி கே சாகரத்னம்மாள் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சி வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7.45 கர்நாடக சங்கீதத்தின் வரலாறு பேச்சு 8 டி கே சாகரத்னம்மாள் புல்லாங்குழல் 8 30 குரலவை* 9 ஆங்கிலத்திலசெய்தி 9 15 திருப்பாம்புரம் என் சிவசுப்பிரமணிய பிள்ளை பாட்டு 10 முடிவு.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## 60-ம் ஆ. வச்சிர விழா

# கா ணி வ ல்

மே மீ 2 ந் உ — 13 ந் உ

உலகப் பிரசித்தி பெற்ற மாயாவி

கோஜியா பாஷாவின்

மாயாஜாலங்கள் ஆடல்பாடல்கள் அருங்கலைக்காட்சிகள்

மின்சாரதீப வேடிக்கை விநோதங்கள்

உள்ளங் கவரும் இன்னும் அநேக காட்சிகள்!



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

சராசரி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "சாவுனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

க ட ன்.


நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-9



இராஜி 'பிரின்ட்'



இதற் ஒ டு

13½ அங்குலம் 14 அங்குலம்

கல்விக்கோட்டை ஓட்டுக் கம்பனியாரால் ஆக்கப்படும்

கொளுக்கி ஓடுகள்

ஏனைய ஓடுகளைக் காட்டிலும் நீடிய காலத்திற்கு உபயோகப்படுவன; கசிவில்லாதன. அரசினர்க்குரிய ஸ்தாபனங்களிலும் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள மாளிகைபோன்ற வீடுகளுக்கும் உபயோகிக்கப்படுவன

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பார்க்கலாம்

V. ராஜசேகரம் சேகரம் அன்ட் சன்ஸ்
சொந்தக்காரர் 74/4 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்



# பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்

உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)

சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்

பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு அச்சில)

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்

மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்

மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது.
விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)

ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

சைவ சமயசாரம்:

ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது.
விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மூலதனம் | | 7, 500, 000-00 |
| கொடுக்கவிருக்கும் | ,, | 4, 500, 000-00 |
| கொடுபட்ட | ,, | 4,500, 000-00 |
| நிலைதரமான சேமநிதி | | 3, 000, 000-00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்டல்வீதி, கொழும்பு.

நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ட் கம்பனி.

லண்டன் காரியாலயம்:- 4-6-8 லூட் கேட் கிரெண்டஸ்.E. C. 4.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.

யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகளை இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு. இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

L P. N சிங்கம்
ஏஜெண்டு


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245 Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna. on Friday April 27, 1951